VISIT…

அந்நியர்கள் உள்ளே வரலாம்

முன்வாசல்

யாருடைய கண்ணிலாவது
பட்டுவிடுமென்ற பயத்தில்
மறைத்துவைக்க, கடைசியில்
நானே தேடியெடுக்கும்படியான
நாட்குறிப்பு இது

மென்மையற்ற கரையான்கள்
மென்றது போக
மக்கிய காகிதங்கள்
உதிரத் தொடங்கிவிட்டன

மேலுமிதை காக்க
வேறு வழிதெரியாத
மனசின் தவிப்பே
உங்கள் வாசிப்பை
அனுமதிக்க நேர்ந்தது

தனியாய் நடந்து வந்த
என் தேவதையின்
சுவடுகளை
மிதித்துவிடாத ஜாக்கிரதையோடு

அந்நியர்கள்
உள்ளே வரலாம்

தந்திக் கம்பத்தில்
உட்கார்ந்திருக்கும் காகம்
கரைந்து கொண்டேயிருக்கிறது.

வெகு சகஜமாகிவிட்ட பிற்பாடும்
விருந்தாளியாகவே உன்னைக் கருதும்
இந்த காக்கையிடம்
என்ன சொல் விளங்கவைப்பது?

நீயிருக்கும் வீதியை
கடக்கும் போதெல்லாம்

விளையாட்டையும் மறந்து
கிசுகிசுக்கின்றன பிள்ளைகள்

என்னைப்பற்றி தானோ
என்கிற கூச்சத்தில்
தலைகுனிந்தபடியே

நகர்ந்து விடுகிறேன்

உனக்கான
எந்தத் தலைகுனிவும்
உற்சாகத்தையே
தருகிற தெனக்கு

பிறர் கூடும்
பெரும் சபையில்
எனக்கு மட்டுமே
நேர்ந்து விடுகிற
அவமானத்தை
உன்னிடம் கொட்டித் தீர்த்து
கதறலாம் போருந்தது

எப்படியோ கேள்விப்பட்டு
கலங்கிய கண்களோடு
நீ எதிர்படுகையில்

எதுவுமே
நடவாதது போல
மாறிய என் முகத்தை
என்னவென்று பெயரிடுவது?

எனக்காக நீ
திறந்து வைக்கும் ஜன்னல்
காற்று ஏன்
வந்து தொலைக்கிறது

அதட்டுகிற அம்மாவை
மிரட்டுகிற அப்பாவை
அடிக்கடி நினைவூட்டும்
உனது செயல்களை மாற்று

கொஞ்ச நேரமாவது
வீட்டு பயமில்லாது
பேசிவிட்டுப் போகிறேன்

உனக்கென்று வரும்போது பேரம் பேசாமல்
பூ வாங்குகிறேன்
பூக்காரிகள் நம்மை ஆசீர்வதிக்கிறார்கள்

முகமறியாத உனக்கவள்
கொடுத்தப் பாராட்டுக்கு
எந்த விலையும் தரமுடியாது
என்னால்.

சொந்தம் மறந்தவனென்று
உறவுகள் தூற்றட்டும்
இறந்தவர் வீட்டுக்கெல்லாம்
வரவே மாட்டேன்

நீ
அழுது கொண்டிருப்பதை
பார்க்க முடியாது என்னால்

உனது எல்லா அழகுகளையும்
மொத்தமாக எழுதிவிட முடியாது
எனில்,
எழுதும் போதே கூடி விடுகிற
அழகு உனக்கேயானது

உனக்குத் தெரியாமல்
உன் கைக்குட்டையில்
அழுத்தமாய் ஒரு முத்தம் பதித்து
அதே இடத்தில் வைத்துவிடுகிறேன்

பிறிதொரு நாளில்
அழுத விழியுடன் நீ வருகிறாய்

உங்கள் முத்தத்தை
தொலைத்துவிட்டேனென்கிற
பரிதவிப்போடு...

அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்க
ஒரு புகைப்படம் கேட்டனுப்பினாய்

எல்லா ஆல்பத்திலும்
பிழையாகவே பதிந்திருக்கும்
என்னை
உன்னை விடவும் சரியாக படம் பிடிக்க
யாரால் முடியும்?

நாம் நின்று பேசிய
நுணா மரத்தை வெட்டி விட்டார்கள்
நீ
விட்டுப்போன சுவடுகளில்
வெய்யில் படுமே என்றுதான்
வருத்தப்படும் அந்த மரமும்

எதிரில் வரும்
என்னைக் கண்டதும்
சண்டைக்காரர்களோடும்
நீ
பேசுதாய் செய்கிற
பாவனை

எவ்வளவு
வெட்கம் நிரம்பியதென்று
எனக்கு மட்டுமே
தெரியும் ரகசியம்

பெயர் சொல்யும்
குறிக்க மறந்த
தொலைபேசிகள்
அநேகம்

பெயர் சொல்லாமல்
வைத்து விடுகிற
பெண் குரல் என்பதோடு

முகத்தில் படரும்
புன்முறுவல்
உணர்த்தி விடுகிறார்கள்
உன்னை

கிணற்றுத் திட்டில் அமர்ந்து
உள்ளெழும்
நீர் வளையங்களை
கணக்கெடுத்து
ரசிக்கத் தொடங்குகிறாய்

உச்ச பரவசத்தில்
நீ உதிர்க்கும்
வார்த்தையில் முங்கித்
திளைக்கிறேன்
பிறகோ -
சலனமற்று கிடக்கிறது நீர்.

எண்ணுவதற்கு நீர் வளையம்
இல்லையென்று நீ
கல்தேட முயல்வதற்குள்
என் கைவிரல் மோதரத்தை
உனக்குத்
தெரியாமல் தவற விடுகிறேன்

மறுபடியும் குதூகத்து
குழந்தையாகிறாய்

எப்பவும் எண்ணுவதற்கு
பிடித்தமானது
உனக்கு நீர் வளையம்
எனக்குன் கை வளையல்

என்னென்ன பேசுவதென்று
இருவருமே ஒத்திகை
நடத்திக் கொண்டே
என் வீட்டுக்குப் போகிறோம்

அதிர்ச்சி தொனிக்காத
முகத்தோடு கதவு திறக்கிறாள்
அம்மா

வார்த்தையைத் தொலைத்த
வைராக்கியத்தில்
அதிர்ந்துபேசும் அப்பாவோடு
அத்தனை கண்களும்
மௌனங்களால்
பேசிக் கொண்டன

ஒரு மிகப்பெரிய
புயலுக்குப் பின்னான
அமைதியோடு
நீ பேசத் தொடங்குகிறாய்

ஒவ்வொரு சொற்களிலும்
உன்னை நிரூபிக்க
நீ படும் பாட்டை
லேசான கர்வத்துடன்
ரசிக்கிறேன்

சட்டென்று விடைபெறும்
தருணத்தில்
'வழியனுப்பிட்டு வா' என்ற
அம்மாவின் நாகரிகமும்

யாருக்கும் தெரியாமல்
அண்ணி என்றழைக்க
மறக்காத தம்பியின் சமயோசிதமும்
அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது

நீ
கொடுத்து வைத்தவள்தான்
என்னிடம் மட்டுமல்ல
எல்லோரிடமும்

என் எல்லா ஆடைகளும்

உன் கண்களை முன் வைத்தே
தேர்ந்தேடுக்கப்படுகின்றன

உன் ஒவ்வொரு புன்னகையும்
என் முகச் சாயலை
உத்தேசித்து உதிர்க்கப்படுபவை

தோற்பதற்கும் விட்டுக் கொடுப்பதற்கும்
நிறைய வித்தியாசமிருக்கிறது.

தோற்றபிறகு விட்டுக் கொடுப்பது
தியாகம்
தோற்கக்கூடாதென விட்டுக் கொடுப்பது
நேசம்

நான் தோற்க நினைக்கிறேன்
நீ விட்டுக் கொடுக்கிறாய்

உடைந்தால் கலங்குவாயென்று
ரப்பர் வளையல்கள்
வாங்கிக் கொடுத்தேன்

நீயோ
அளவு சரியில்லை என்பதற்காக
இளைக்கத் தொடங்கிவிட்டாயே

உன் முந்தானையால்
தலை துவட்டி விடுவாய் என்பதற்காகவே
குடைமறந்து வந்த மழைநாளில்

ஜீன்ஸும் டி-ஷர்ட்டுமாய்
நின்றிருந்த உன்னை
என்ன சொல் திட்டுவது?

எந்த வேண்டுதலுக்காக
இந்த விரதம்

அள்ளிக் குடிக்கத் தெரிந்திருந்தும்
தள்ளி நிற்குமிந்த
தாகத்தை
தண்ணீரே கொடுக்கும் விநோதம்
யாரால் தொடங்கப்பட்டது?

குனித்த புருவமும்

கொவ்வைச் செவ்வாயில்
குமின் சிரிப்பும்
பனித்த சடையும்
பவளம் போல் மேனியிற்பால்
வெந்நீரும்
இனித்தமுடை எடுத்த
பொற்பாதமும்
காணப் பெற்றால்
மரித்துப் போவானா சொல்
எவனேனும்

யாரோவொரு
கர்ப்பிணிப் பெண்ணுக்கு
எழுந்துகொண்டு
இருக்கை கொடுக்கிறாய்

நாளை உனக்குமொருத்தி
இடம் கொடுக்க
நேருமென நினைக்கையில்

நீயாகவே
இடம்பிடித்துக் கொண்ட
என்
மனசு சிர்க்காமல்
என்ன செய்யும்?

உதடுகளால் நீ பேசியதை விட
உன் உதடுகள் என்னிடம்
நிறையப் பேசியிருக்கிறது.

ஆவி பறக்கும் வெந்நீரில்
விரல் தீண்டிச் சோதித்து
குடிப்பதற்குத் தோதாக்கி
குவளை நீட்டுகிறாய்

பதம் பார்க்கும்
நொடியில்
நீ
துடித்த துடிப்பையும்
மறைத்துக் கொண்டு
மெல்தாய் சிரிக்கிறாய்

எத்தனை நீர் கலந்தும்
ஆற மாட்டாமருக்கிறது
மனசும்
அந்தக் காட்சியும்

சின்னச் சின்னதாய் சொல்லும்
பொய்களையெல்லாம்
எப்படியோ
கண்டுபிடித்து விடுகிறாய்

அப்போதும்
பொய் சொல்வதில்கூட தென்படாத
என் புத்திசாத்தனத்தின் மீதுதான்
உன் கோபமெல்லாம்

ஒரே நேரத்தில்
அத்தனை ஊற்றும்
பெருக்கெடுக்க
வழியுமுனது ஞாபகங்களை
எந்தப் பாத்திரத்தில்
பத்திரப்படுத்துவது?

அம்மாவின் புடவையை
உடுத்திக் கொண்டு
கண்ணாடி முன் நின்று
உன்னையே நீ
புகழ்ந்திருந்த தருணத்தில்

நானுன் வீட்டுக்குள்
நுழைகிறேன்
எங்கிருந்தோ பெருகிய
வெட்கமும் அழகும்
மிகுதியாக

மறைவிடத்தை
தேடுகிறாய் நீ
புகைப்படமாய்
திரும்புகிறேன் நான்.

பிரியங்களை
பரிமாற நீ
கிடைத்த பிறகே

தவறாமல் கோயில் வரும்
பழக்க மேற்பட்டது

வந்த இடத்திலும்
தொந்தரவு தருமுனது
ஞாபகத்தில்

பிரகார சுற்றுகளின்
எண்ணிக்கையை

தவற விட்டு விடுகிறேன்.

அதிகமாய் சுற்றுவதால்
அம்பிகை
கோபிப்பாளா?

பிடித்த பாடலை
முணுமுணுத்துக் கொண்டே
ஜடைபின்னும்
லாவகத்தில் சிக்கி

பின்
ஜன்னல் வழியாக
பறந்து வருகிறது
ஒற்றைச்சுருள் முடி
கனமானவற்றை விடவும்
மெல்தான
சம்பவங்களில்
நீயென்னை
மிரட்டி விடுகிறாய்

ஒரு தீக்குச்சிப் போல
தீர்ந்து விடுகிறது
உன்னிடம் பேசுவதற்காக
நான் சேமித்த சொற்கள்

போன பிறகும்
மணம் வீசிக் கொண்டிருக்கும்
ஊதுவர்த்தியை போன்றதுன்
வார்த்தைகள்